# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# இயேசுவுக்கு ஒரு கஷ்டமான நேரம்


எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Byron Unger; Lazarus
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர் : M. Maillot; Sarah S.



**கதைகள்** 60 **ல்** 38

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil

இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது தேவன் பேசினார். அவர் சொன்னது, "இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்." பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் புறாவை போல் இறங்கினார்.



1

அதன் பின்பு, தேவனுடைய ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கே அவர் தனிமையாயிருந்தார்.



2


இயேசு நாற்பது நாட்கள் உபவாசித்தார். அப்படியென்றால் அவர் உணவு ஒன்றும் சாப்பிடவில்லை. அவருக்கு மிகுந்த பசி உண்டாயிற்று.
3


அங்கே காட்டு மிருங்கள் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது.
4


சாத்தான் இயேசுவை சோதிக்க வந்தான், நீண்ட நாட்களுக்கு முன்பு ஏதேன் தோட்டத்தில் அவன் ஆதாமையும், ஏவாளையும், தேவனுக்கு கீழ்ப்படியாதபடி சோதித்தான். இப்போது இயேசுவும் சோதிக்கப்படுகிறார்.
5


தேவனுடைய குமாரனாகிய இயேசுவையும் சாத்தான் சோதிக்க முயற்சி பண்ணினான்.
6


நீ தேவனுடைய குமாரனானால், "இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும்," என்றான். இயேசு பசியாயிருக்கிறார் என்று அவனுக்குத்தெரியும்.
7


தேவகுமாரனாலே கல்லுகளை அப்பங்களாக மாற்ற முடியும் என்று அவனுக்குத் தெரியும். இயேசு சாத்தானுக்கு கீழ்ப்படிவாரா?
8


இல்லை! இயேசு சாத்தானுக்கு கீழ்ப்படியவில்லை. பதிலாக, தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர் பதில் கொடுத்தார்.
பரிசுத்த வேதாகமம்
9
"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்."
பரிசுத்த வேதாகமம்
10
பின்பு சாத்தான் இயேசுவை ஜனங்கள் தேவனைத்தொழுது கொள்ளுகிற எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றான். அடுத்து சாத்தான் என்ன செய்வான்?
11
"நீர் தேவனுடைய குமாரனானால், தாழக்குதியும், என்று சாத்தான் சொன்னான்? தேவதூதர்கள் உம்மை காப்பார்கள் என்று தேவவசனம் கூறுகிறது."
12
"இல்லை!" இயேசு சொன்னார். "உன் தேவனை பரீட்சை பாராதிருப்பாயாக ... என்றும் எழுதப்பட்டிருக்கிறது."
பரிசுத்த வேதாகமம்
13
சாத்தான் இன்னுமொருமுறை முயற்சித்தான். அவன் இயேசுவை பட்டணத்தின் மலை உச்சிக்கு எடுத்துச் சென்றான்.
14













இயேசுவுக்கு ஒரு கஷ்டமான நேரம்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 4, லூக்கா 4

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.